**நவம்பர் - 7**

**"யேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும், தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும் நான் கண்டேன்." - வெளி 20 : 4.**

இந்த சிரச்சேதம் உருவகமானது, சொல்லர்த்தமுள்ளது அல்ல. ஆனாலும் இது ஆழ்ந்த அர்த்தம் கொண்டதாயிருக்கிறது. சுயசித்தத்திற்கு மரித்திருப்பதை மாத்திரமல்லாமல் மற்ற எல்லாத் தலைகளிலிருந்தும், அரசாங்கங்களிலிருந்தும், நியாயப்பிரமாணிக்கர்களிடமிருந்தும் துண்டிக்கப்பட்டவர்களாயிருந்து சரீரமாகிய சபையின் - அதன் ஒவ்வொரு அங்கத்திற்கும் - தலையாயிருப்பதற்கு தேவன் நியமித்திருக்கிற யேசுவையல்லாமல் வேறு "தலையை" கண்டுகொள்ளக்கூடாது எனபதை இது தெரிவிக்கிறது. ஸ்தாபனங்களின் தலைவர்களிடமிருந்தும், அதிகாரிகளிடமிருந்தும் துண்டிக்கப்பட்டவர்களாயிருப்பது மாத்திரமல்லாமல், நம்முடைய சொந்தச் சித்ததையும் தலையையும் ஒழித்துவிட்டவர்களாக இருப்பதையும், அதற்குப் பதிலாக நம்முடைய கர்த்தராகிய யேசுவினுடைய சித்தத்தை தலையை ஏற்றுக் கொண்டவர்களாக இருப்பதையுமே இது குறிக்கிறது. ரோம 6.3ல் அப்போஸ்தலன் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகிற கருத்தும் அதுவேதான். இங்கே, அந்த ஒரே தலையின் கீழ் கிறிஸ்துவினுடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறதினால் சிறுமந்தை வகுப்பார் கிறிஸ்துவின் சரீரத்தில் அதன் அங்கங்களாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் என்று அவர் தெரிவிக்கிறார். அதாவது மரணபரியந்தம் உண்மையாயிருந்து சித்தத்தின் பூரண பிரதிஷ்டையையும், முற்றிலுமாக ஜீவனையும் கொடுக்கிறார்கள். **- Z 00, 285 (R 2699).**

இங்கே குறிக்கப்பட்டிருக்கிற சிரச்சேதம் சொல்லர்த்தமுள்ள சிரச்சேதமாக இருக்க முடியாது. அப்படியிருந்தால் யேசுவும், பேதுருவும், ஸ்தேவானும், யோவானும், சிறுமந்தையிலிருந்து அகற்றப்பட்டிருப்பார்கள். அவர்கள் ஜெயங்கொண்டவர்கள் என்று ஆவியினால் ஏவப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிற அத்தாட்சி நம்மிடமிருக்கிறது. சந்தேகமின்றி சிறுமந்தைக்குரிய மற்ற அநேகரை இது அதிலிருந்து அகற்றிவிடும். ஆகையால், இது ஒரு அடையாளமான சிரச்சேதமாக இருக்க வேண்டும். அதாவது, இயற்கையான இதயங்களையும், மனதையும், சித்தத்தையும் விட்டு விடுகிறதினால் யேசுவை அவருடைய இருதயத்திலும், மனதிலும், சித்தத்திலும் தலையாக எடுத்துக்கொள்ளுவதாகும். நம்முடைய இரட்சிப்புக்கும், உலகத்தாரின் இரட்சிப்புக்குமுள்ள சம்பந்தத்தில் தேவனையும், கிறிஸ்துவையும் விபரிக்கின்ற சத்தியத்துக்கு உண்மையான பற்றை வைத்திருப்பதின் காரணமாகவே இந்தச் சிரச்சேதத்தை நாம் அனுபவிக்கிறோம், பராமரிக்கிறோம். **- P 35,171.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**மத் 13.44-46; ரோம 6.3-11,16,19, 12.1-5; 2கொரி 8.12; மத் 7.21-23; மாற் 10.35-39, 12.42,43; அப் 18.5; ரோம 10.9-11; 1யோவா 1.6; வெளி 6.11.**

**கோபுர வாசிப்பு : Z 01, 227 (R 2844).**

**வினாக்கள் : இந்த வசனம் இந்த வாரத்தில் எனக்கு எவ்வாறு இருந்தது? சந்தர்ப்பங்களும் பலாபலன்களும் என்ன?**